மரங்களை வெட்ட உச்ச நீதிமன்றத்தில் அனுமதி பெற்றபின், வனப் பாதுகாப்புச் சட்டம், 1980—ன்படி கருத்துரு தயார் செய்யப்பட்டு மத்திய அரசுக்கு அனுப்பி, இதற்கு உரிய அனுமதி பெற்றபின் இந்தச் சாலையை அமைக்க இயலும். மேற்படி சாலை அமைக்க உச்ச நீதிமன்றத்தின் முன் அனுமதி பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 79, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சீனிவாசன், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

79—

புறவழிச் சாலை

***906—திரு. ஆர். சீனிவாசன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆற்காடு—ஆரணி சாலையில் போக்குவரத்து நெரிசல் அதிகமாக உள்ளதால் புறவழிச் சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) ஆற்காடு—ஆரணி சாலையில் போக்குவரத்து நெரிசல் அதிகமாக உள்ளதால் புறவழிச் சாலை அமைக்க திட்டமிடப்பட்டு ரூபாய் 3.24 கோடி மதிப்பில் 9.82 எக்டேர் நிலத்தைக் கையகப்படுத்தும் கருத்துரு ஆய்வில் உள்ளது என்பதைத் தங்கள் வாயிலாக உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சீனிவாசன் அவர்கள்.*

திரு. ஆர். சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். ஆற்காடு நகரிலே கூட்ட நெரிசலைத் தவிர்க்க வேண்டி புறவழிச் சாலை அமைக்க ஆய்வில் உள்ளது என்ற மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலையும், அதற்காக மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கால அரசு எடுத்து வரும் போர்க்கால நடவடிக்கையையும் வரவேற்கிறேன். எங்கள் ஆற்காடு தொகுதிவாழ் மக்களின் எண்ணங்களும் செயல்பாடுகளும், கோரிக்கைகளும், மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் விரைந்து நிறைவேறும் என்பதில் சிறிதளவும் ஐயமில்லை என்பதைக் கூறிக்கொண்டு நன்றி கூறி விடைபெறுகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ் அவர்கள்.*

திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் புறவழிச் சாலை 30 ஆண்டுகளுக்கு முன்னால் அமைக்கப்பட்ட பொழுது அது நகரின் ஓரமாக இருந்தது. இப்போது விரிவுபடுத்தப்பட்ட மாநகராட்சியிலே, மையப் பகுதியிலே மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் வீட்டுக்குப் பக்கத்திலே இருக்கிறது. ஏ.வி.ஆர். ரவுண்டானா மற்றும் திருவாக்கவுண்டனூர் ரவுண்டானா, கந்தம்பட்டி ரவுண்டானா ஆகிய இடங்களில் அடிக்கடி விபத்து நடந்து நிறைய மனித உயிர்கள் பலியாகின்றன. அரபிக் காலேஜிலிருந்து புதிய புறவழிச் சாலை அமைக்க அரசு முன்வருமா அல்லது ஏ.வி.ஆர் ரவுண்டானா, திருவாக்கவுண்டனூர் ரவுண்டானா, கந்தம்பட்டி ரவுண்டானா அருகே மேம்பாலங்கள் அமைத்துத்தர அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அமைச்சர் அவர்களிடம் கேட்க விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்*

குறிப்பிடுகின்ற சாலை தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின்கீழ் வருகின்றது. இதுகுறித்து தேசிய நெடுஞ்சாலை ஆணையத்திடம் தெரிவித்து மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை நிறைவேற்றுவதற்கு அரசு ஆய்வு செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.பி. முத்துக்குமரன் அவர்கள்.

திரு. எஸ்.பி. முத்துக்குமரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை நகரத்தில் புறவழிச் சாலை அமைப்பதற்கான நீண்டகாலத் திட்டம் தொடர்ந்து நிலுவையிலே இருந்து வருகிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அதனை நிறைவேற்றித் தருவாரா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கும் வினாவிற்கும் தொடர்பு இல்லை. இதற்கு தனி வினா எழுப்பினால் அவருக்குத் தேவையான பதில் விரிவாக அளிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி.பி. பாஸ்கர் அவர்கள்.

திரு. கே.பி.பி. பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுக்கு முதற்கண் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நாமக்கல் தொகுதியில் மட்டும் சுமார் 50,000 வாகனங்கள் உள்ளன. அதுமட்டுமல்லாமல் புகழ்பெற்ற ஸ்ரீ ஆஞ்சநேயர் கோயிலுக்கு தினமும் நூற்றுக்கணக்கான வாகனங்கள் வருவதால் போக்குவரத்து கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. ஆகவே, புதிய புறவழிச் சாலை அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாமக்கல் நகரத்தையொட்டிய புறவழிச் சாலை அமைத்திடும் பணி அரசின் ஆய்வில் உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 80, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. மைக்கேல் ராயப்பன் அவர்கள், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

80—

தூண்டில் வளைவு

***955—திரு. சி. மைக்கேல் ராயப்பன்:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், உவரி மீனவ கிராமத்தில் கடலரிப்பைத் தடுத்திட தூண்டில் வளைவு அமைத்துக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மக்கள் நலம் பயக்கும் திட்டங்கள் எதுவாக இருந்தாலும், நிறைவேற்ற உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று உத்தரவிட்டதன் பயனாக திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், உவரி மீனவ கிராமத்தில் தூண்டில் வளைவு அமைக்கும் பணிக்காக ரூபாய் 489.20 இலட்சங்களுக்கு மத்திய அரசின் நிதிக் குழுவிலிருந்து நிதியுதவி பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. மைக்கேல் ராயப்பன் அவர்கள்.*

திரு. சி. மைக்கேல் ராயப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது கோரிக்கையினை ஏற்று உவரி மீனவ கிராம மக்களுக்கு 4 கோடியே 89 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாயில்*